# மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ, டாக்சி சேவை

## பிப்ரவரி மாதம் 38 ஆயிரம் பேர் பயன்படுத்தியுள்ளனர்

சென்னை, மார்ச்.8–

சென்னையில் எழும்பூர், டி.எம்.எஸ்., அண்ணாநகர் கிழக்கு, கோயம்பேடு, ஆலந்தூர், வடபழனி ஆகிய மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் டாக்சி இயக்கப்படுகிறது. அதேபோல் கிண்டி, திருமங்கலம், ஆலந்தூர், சின்னமலை, ஈக்காட்டு தாங்கல், கோயம்பேடு மற்றும் பரங்கிமலை ஆகிய மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ சேவையும் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சேவை மெட்ரோ ரெயில் நிலையங்களில் இருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சுற்று வட்டார பகுதிகளுக்கு இயக்கப்பட்டு வருகிறது. பயணிகள் விரைவாக மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு வந்து செல்ல வேண்டும் என்பதற்காக இந்த சேவை தொடங்கப்பட்டது. இதற்கு பொது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்ததால் ஷேர் ஆட்டோ கட்டணம் ரூ.10–ல் இருந்து ரூ.5 ஆகவும், ஷேர் டாக்சி கட்டணம் ரூ.15–ல் இருந்து ரூ.10 ஆகவும் குறைக்கப்பட்டு உள்ளது.

இந்த சேவையை கடந்த ஆண்டு ஆகஸ்டு 11–ந்தேதியில் இருந்து தற்போது வரை 2 லட்சத்து 16 ஆயிரத்து 566 பேர் பயன்படுத்தி உள்ளனர். கடந்த பிப்ரவரி மாதம் மட்டும் 38 ஆயிரத்து 642 பேர் பயன்படுத்தி உள்ளனர்.